**இலங்கை திறந்த பல்கலைக்கழகம் - 2013**

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசிலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு

நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்

துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாடநெறி கைவிடப்பட்டமையின் காரணமாக மீளச் செலுத்த வேண்டிய மாணவர் கட்டணத்திற்காக நிதிக்குழுவின் அங்கீகாரமின்றி பாடநெறிக் கட்டணங்களிலிருந்து 1 சதவீத ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டின் போது இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கம் ரூபா 5,264,869 ஆக இருந்த போதிலும் மீளச்செலுத்தப்பட்ட பணம் ரூபா 186,182 ஆக இருந்தது. ஒதுக்கம் மேற்கொள்ளப்படும் போது எதிர்காலத்தில் கிடைக்க வேண்டிய பணத்தை அடிப்படையாகக் கொண்டு ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக மிகை ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிலையான சொத்துக்களுக்கு பெறுமானத் தேய்விடும் கொள்கையாக சொத்து கொள்வனவு செய்யப்பட்ட திகதியை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்படுகின்றமை கணக்கீட்டுக் கொள்கைகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், நிர்மாணங்கள் தொடர்பாக பயன்பாட்டிற்கு தகுதியான நிலைக்கு உள்ளாகிய நிதியை இனங்காண முடியாதிருந்தமை மற்றும் நூலக புத்தகங்களை கொள்வனவு செய்த திகதி இனங்காண முடியாதிருந்தமையினால் முழு வருடத்திற்கும் பெறுமானத் தேய்வு கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) கணக்கீட்டுக் கொள்கைக்குரிய குறுகிய கால பாடநெறி வருமானம் மற்றும் ஏனைய வருமானம் தொடர்பாக செலவினத்துடன் ஒப்பிடும் போது வருமானம் இனங்காணப்படல் மதிப்பிடப்பட்ட மொத்த செலவினம் அறிக்கையிடப்பட்ட திகதியில் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தின் சதவீதத்துடன் ஒப்பிட்டு மொத்த வருமானத்தின் ஒரு சதவீதம் நிதிக்கூற்றுக்களில் வருமானமாக இனங்காண வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்தின் குறுகிய கால பாடநெறிகள் மற்றும் ஏனைய வருமானங்களை இனங்காணுகையில் செலவினத்துடன் ஒப்பிட்டு வருமானம் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களிற்குரிய அலுவலக உபகரணங்களின் பெறுமானத் தேய்வு ரூபா 475,080 தொகை குறைவாகவும் தளபாட உபகரணங்களின் பெறுமானத்தேய்வு ரூபா 25,354 தொகை அதிகரித்தும் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) நீண்ட கால பாடநெறி வருமானம், மாணவர் பாடநெறிக் கட்டண வருமானமாக செயற்பாட்டு வருமானத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் 04 நீண்ட கால பாட நெறி வருமானம் ரூபா 6,048,642 மற்றும் செலவினம் ரூபா 6,048,642 தொகை குறுகிய கால பாடநெறி மற்றும் ஏனைய அடிப்படை வருமானத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) நிதிக்கூற்றுக்களில் ஆண்டிற்குரிய சகல வருமானமும் செலவினமும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் Sustainable Energy Engineering MSc பாடநெறிக்குரிய வருமானம் ரூபா 2,433,393 தொகை மற்றும் செலவினம் ரூபா 2,374,650 தொகை என்பன முழுமையாக நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டு அதன் தேறிய விளைவுகளில் பெறப்பட்ட வருமானமாக நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) வவுனியா மற்றும் கம்பஹா கல்வி நிலையத்தில் அமைந்துள்ள காணியின் அளவு அதிகரித்துக் காண்பிக்கப்பட்டு மீள்கணிப்பீடு செய்தமையின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் காணியின் பெறுமதி ரூபா 585,500 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 வரையும் சரிசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழக மாணவர் கட்டணத்தை அறவிடும் போது ஒரு கல்வியாண்டிற்கு மாணவர் கட்டணம் 02 தவணைகளில் அறவிடப்பட்டிருந்ததுடன் முதலாவது தவணைப்பணம் செலுத்தியதன் பின்னர் அது வருமானமாக கருதப்பட வேண்டிய போதிலும் இரண்டாவது தவணைக்கான உறுதிச்சீட்டை அனுப்பும் சந்தர்ப்பத்தின் போதே வருமானக் கணக்கில் செலவு வைத்து அந்த அளவு பெறவேண்டிய வருமானமாகக்

கருதுவது பல்கலைகழகத்தின் கொள்கையாகும். மீளாய்வாண்டில் மாணவர் கட்டண வருமானம் ரூபா 609,989,377 ஆக இருந்ததுடன் அதில் ஆண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய மாணவர் கட்டண அளவு ரூபா 219,502,265 தொகை அதாவது 36 சதவீதம் முன்னைய பல வருடங்களிற்கு முன்பிருந்து கிடைக்க வேண்டிய மாணவர் கட்டணமாகும். பாடநெறியைக் கைவிட்ட மாணவர்களிடமிருந்து அறவிட வேண்டிய மீதியும் இதில் பிரதிநிதித்துவப்படுத்துகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) பல்கலைக்கழக ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட இடர் கடன், வாகனக் கடன் மற்றும் பதவியணியினர் கடன் தொடர்பாக நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடப்படாத கடன் மீதி ரூபா 760,408 ஆக இருந்ததுடன் அதில் 21 வருடங்கள் முதல் கொண்டுவரப்படுகின்ற கடன் மீதி ரூபா 33,907 தொகை மற்றும் 5 வருடங்களிற்கு மேற்பட்ட கடன்மீதி ரூபா 522,518 ஆக இருந்தது. அவ்வாறே ரூபா 160,596 கூட்டுத்தொகையான 26 கடன் மீதிகள் அறவிட முடியாததாக இனங்காணப்பட்டிருந்தது.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறந்த பல்கலைக்கழகத்தின் சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்தல் தொடர்பாக 2013 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டுத் திணைக்களத்தின் இடைக்கால அறிக்கையின் பிரகாரம் காணியின் பெறுமதி ரூபா 102,729,215 தொகையினாலும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 1,557,533,204 இனாலும் குறைக்கப்பட வேண்டியமை நிதிக்கூற்றுக் குறிப்புக்களின் மூலம் காண்பிக்கப்பட்டிருந்தது. மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் சொத்துக்களின் மீள் கணிப்பீட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு பூரண அறிக்கை (2014 ஆகஸ்ட் 22 ஆந் திகதி) வரையிலும் சமர்ப்பிக்கப்படாதிருந்தமையினால் நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற சொத்துக்கள், திரண்ட பெறுமானத் தேய்வு, மற்றும் மீள் கணிப்பீட்டு ஒதுக்கம் போன்ற மீதிகளின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) தொலைக்கல்வியை நவீனமயப்படுத்தும் செயற்திட்டம் மூலம் கிடைத்த ரூபா 2,868,447,927 தொகையான சொத்துக்களிலிருந்து ரூபா 28,259,433 பெறுமதியான அலுவலகத்தை பகிர்ந்தளித்தல் மற்றும் மரத்தளபாடங்கள் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமாகக் காணப்படுகின்றமை

உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ரூபா 175,907,897 தொகையான தகவல் தொழில்நுட்ப உபகரணங்களின் (ICT Equipment) பெறுமதி குறிப்பிடப்படாது அளவுகள் மாத்திரம் காண்பிக்கப்பட்டு பட்டோலை மாத்திரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) கொள்வனவு வழிகாட்டிக் கோவை - 2006 | |
| 7.12.1 ஆம் பிரிவு | ஆராய்ச்சி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக பதிவு செய்துள்ள 18 வழங்குனர்களிடமிருந்து மாத்திரம் கூறுவிலைகள் கோரப்பட்ட போதிலும் இரண்டு வழங்குனர்களிடமிருந்து மாத்திரம் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இந்த இரண்டு நிறுவனங்களில் ஒவ்வொரு விடயத்திற்கும் உரியதாக தனித்தனியாக கூறுவிலை சமர்ப்பித்த நிறுவனத்திற்கு கட்டளை கையளிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனத்தில் சில விடயங்களில் கூறு விலை சமர்ப்பித்த மற்றைய நிறுவனம் அந்த விடயத்தை விட அதிகரித்த காரணத்தினால் ரூபா 279,118 தொகை அதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அதிகரித்த விலையுடைய விடயங்களை அந்த நிறுவனத்திலேயே கொள்வனவு செய்வதற்கான காரணம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி நிறுவனத்திற்கான தாபன விதிக்கோவை | |
| XX அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு | இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணியினருக்கு 2013 ஆம் ஆண்டில் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 486,147,743 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் பிரகாரம் வரவினைப் பதியும் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிறுவனத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 150,823,116 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 89,968,693 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 60,854,423 தொகையான முன்னேற்றத்தைக் காணக்கூடியதாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மாணவர் கட்டண வருமானம் ரூபா 304,520,140 இனாலும் அரசாங்க மானியம் ரூபா 181,615,000 இனாலும் அதிகரித்தமை மற்றும் பெறுமானத் தேய்வு ரூபா 240,943,682 தொகை குறைவடைந்தமை இந்த நிதி விளைவின் சாதகமான முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

திறந்த பல்கலைக்கழகத்தில் 2011 முதல் 2016 வரையான காலப்பகுதிக்குரிய கூட்டிணைந்த திட்டம் மற்றும் 2013 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றின் பிரகாரம் பாடநெறி திருத்தங்கள் மற்றும் அச்சிடல் நடவடிக்கைகள் காலப்பகுதியின் அடிப்படையில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் கல்விப் பீடம், பொறியியல் பீடம் மற்றும் தொழில்நுட்பப் பீடம் மற்றும் இலத்திரனியல் மற்றும்

கணனி பொறியியல் அபிவிருத்திப் பிரிவு என்பவற்றில் மீளாய்வாண்டின் போது அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறந்த பல்கலைக்கழகத்தின் பிரதேச அலுவலகங்களிலும் 20 கல்வி நிலையங்களிலும் உயர் கல்வி அமைச்சிற்குரிய தொலைக்கல்வி கணனி ஒருங்கிணைப்பு நிலையங்கள் (NODES Access centers) பேணப்படுவதுடன், அந்த நிலையத்திற்காக பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற காணி, கட்டிட வசதி, மின்சாரம், நீர், பாதுகாப்பு மற்றும் சுகாதார வசதிகளுக்காக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 36,993,600 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழக கல்வி மற்றும் கல்விசாரா பதவியணியினருக்கு வெளிநாட்டு புலமைப்பரிசில் வழங்கும் போது 38 உத்தியோகத்தர்களுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளை மீறியமையின் காரணமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 94,665,185 கூட்டுத்தொகையில் 13 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 10,673,950 தொகையை அறவிடுவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் திருப்திகரமான நிலையில் காணப்படவில்லை.

(இ) பல்கலைக்கழகத்தின் கல்விசாரா பதவியணியினர் பல்கலைக்கழகத்தில் ஒவ்வொரு பிரிவுகளுக்கிடையே மாற்றீடுசெய்து ஊழியர்களின் தொழில் திறன்களை முன்னேற்றுதல் மற்றும் வினைத்திறனான சேவையைப் பெறுவதன் மூலம் உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்பெறச் செய்வதற்காக பல்கலைக்கழகம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் படி, 14 உத்தியோகத்தர்கள் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும், 10 உத்தியோகத்தர்கள் 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும் ஒரே பிரிவில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## 4.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தால் பயன்படுத்தப்படாத ரூபா 13,792,455 பெறுமதியான காணிகளின் உரித்தை சட்டரீதியாக கையேற்காது பல்கலைக்கழக காணியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமாக 28 வாகனங்கள் காணப்பட்டதுடன் 03 வாகனங்கள் மூன்று உத்தியோகத்தர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. எஞ்சிய 25 வாகனங்களில் 17 வாகனங்கள் 04 பீடங்களை உள்ளடக்கிய ஏனைய பிரிவுகளிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அந்த வாகனத்திற்காக எரிபொருள் எல்லை தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அந்த எல்லையினை விஞ்சி எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(இ) திறந்த பல்கலைக்கழகத்தின் 17 கல்வி நிலையங்களில் நடாத்தப்படுகின்ற அரசாங்கத்திற்குரிய காணிகளை பல்கலைக்கழகத்திற்கு கையேற்பதற்கு முகாமைத்துவத்தால் போதியளவான வகையில் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அந்தக் காணிகளை மதிப்பீடு செய்து கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பல்கலைக்கழகத்திற்குரிய சகல கொள்வனவுகளும் வழங்கல் பிரிவினால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 17,904,626 பெறுமதியான புத்தகங்கள் நூலகத்தினால் நேரடியாக மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(உ) நிதிய முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு என்பன நலிவான மட்டத்தில் காணப்படுவதுடன் ரூபா 43,921,008 கூட்டுப்பெறுமதியான 46 நிதியங்கள் ஆண்டின் போது விளைவற்றுக் காணப்பட்டது. இதில் ரூபா 4,362,386 பெறுமதியான 12 நிதியங்கள் 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும், ரூபா 5,883,691 பெறுமதியான 08 நிதியங்கள் 05 வருடங்கள் தொடக்கம் 06 வருடங்கள் வரையும் ரூபா 33,674,331 பெறுமதியான 26 நிதியங்கள் 01 வருடம் முதல் 03 வருடங்கள் வரையான காலமாகவும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

திறந்த பல்கலைக்கழகத்தின் 2013 ஆம் ஆண்டின் போது சபடிகல் விடுமுறையின் கீழ் பணி ஒப்படை அடிப்படையில் மூன்று உத்தியோகத்தர்களின் சேவை பெறப்பட்டிருந்தது. அந்த உத்தியோகத்தர்கள் சேவையாற்றிய பல்கலைக்கழகம் மற்றும் பணி ஒப்படை அடிப்படையில் சேவையாற்றிய பல்கலைக்கழகம் என்ற இரண்டு நிறுவனங்களில் இருந்தும் கல்விசார் பதவியணியின் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு கற்கைப்படிகள், வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் 15 சதவீத விசேட படி என்பன செலுத்தப்பட்டமையின் காரணமாக உத்தியோகத்தருக்கு உரித்தான படிகளை விட ரூபா 1,590,105 தொகை அதிகமாகவும் கல்விசாரா பதவியணியின் ஒரு உத்தியோகத்தருக்கு வாழ்க்கைச் செலவுப்படியும் 15 சதவீத விசேட படி செலுத்தப்பட்டமையின் காரணமாக அவர்களுக்கு உரித்தான படிகளை விட ரூபா 124,775 தொகையும் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

தொலைக்கல்வியை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்தின் நிதியத்தின் கீழ் பல்கலைக்கழகத்தின் பொதியிடல் பிரிவிற்காக 2009 ஆம் ஆண்டில் ரூபா 5,308,800 பெறுமதியான 03 சிறிய பொதியிடல் இயந்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் 02 இயந்திரங்களை செயற்படுத்துவதற்குத் தேவையான 02 தொகுப்புகள் வழங்கப்படாதிருந்தமையால் அத்திகதி முதல் 2013 திசெம்பர் 31 ஆந் வரையிலும் செயற்படுத்த முடியாது செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது.

### 4.6 பதவியணியினர் நிருவாகம்

திறந்த பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 1,240 ஆக இருந்ததுடன் அதில் 184 அதாவது 15 சதவீதம் மீளாய்வாண்டின் இறுதியில் வெற்றிடமாகக் காணப்பட்டது. இந்த வெற்றிடங்களுக்கிடையே கல்விசார் பதவியணியினர் 15 சதவீதமும், கல்விசார் உதவி பதவியணியில் 06 சதவீதமும், நிருவாக பதவியணியில் 25 சதவீதமும், கல்விசாரா உதவி பதவியணியில் 16 சதவீதமுமாக பிரிவு ரீதியாக உயர்ந்த மட்டத்தில் வெற்றிட எண்ணிக்கை காணப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

2013 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட 295 செயற்பாடுகளில் 64 செயற்பாடுகள் அடைந்துகொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே மேலும் பல்வேறு செயற்பாடுகளுக்குரிய செயலாற்றல் கணக்காய்விற்கு வழங்கிய செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

2013 ஆம் ஆண்டிற்காக 07 விடயங்களின் கீழ் உள்ளகக் கணக்காய்வு திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக விசேட புலனாய்வு 03 விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. கணக்காய்வு உதவியாளர் பதவி 2012 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2013 ஆம் ஆண்டின் 13 வருமான மூலகங்களுக்காக மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பீடு செய்த போது 23 சதவீதம் முதல் 1029 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன் 03 செலவினத் தலைப்புக்களுக்காக மதிப்பீடு செய்யாமல் ரூபா 327,897 தொகை செலவிடப்பட்டமையினால் பல்கலைக்கழகத்தின் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிதியக் கட்டுப்பாடு
(ஆ) காசு மற்றும் வங்கி நடவடிக்கைகள்
(இ) அச்சிடல் நடவடிக்கைகள்
(ஈ) பதவியணியினர் கட்டுப்பாடு
(உ) வாகனக் கட்டுப்பாடு
(ஊ) களஞ்சியக் கட்டுப்பாடு